கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௬.] விரோதி-ஹு தைமீ [பகுதி-௩.

Vol. 46. January—February 1950 No. 3.

உள்ளுறை.

துடியாசுந்திருநாள்வாழ்த்து:—பத்திராசிரியர்	௬௫—௬௬
வர்ணனைமரபுகள்:-திரு. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.	௬௭-௭௨
தெய்வப்புலவரின் நாவுணர்ச்சி:—திரு. சி. கணேசையரவர்கள்	௭௩—௭௮
திருக்குருகூர்த் திருப்பணிமாலை:—பத்திராசிரியர்	௭௯—௮௩
பாரதநாட்டுக் துடியாசுந்திருநாட்கொண்டாட்டம்:—	௮௪
மதிப்புரை:—	௮௫—௮௮
திருச் சிறுபுலியூர்-உலா குறிப்புரையுடன்:— பத்திராசிரியர்	17—28

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1950.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 51, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீ நாராயணன்,

மானேஜர்.

உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—௪௬.] விரோதி-௵ தை௴ [பகுதி—௩.
Vol. 46. January—February 1950 No. 3.

விரோதி௵ தை௴ 13௳ (26—1—1950) நிகழ்ந்த

குடியரசுத்திருநாள்வாழ்த்து

தாழிசைகள்.

நீராழி சூழுலகு படைத்தளித்துக் காக்குமொரு நிமல ஞான
போராழி மால்கனகக் கோகனகத் தாண்மலர்கள் போற்றல் செய்வாம்;
சத்தியமும் தண்ணளியும் தற்காக்கும் படைக்கலமாத் தாங்கிப் பார்மேல்
எத்திசையும் அறவாழி செலுத்துகுடி யரசினிது வாழ்க வென்றே.
பிறர்க்கின்னா செய்யாத பெருந்தகவும் வாய்மையுமே பேணும் உள்ளத்
தறக்கிழவன் மோகனதாஸ் கரம்சந்த்ர காந்தி தந்த அரசு வாழி.
புயல்பொழியப் புவிதழையப் புகழ்பரவக் கலைநிலவப் புவனம் போற்றும்
செயல்புரியும் குடியரசாற் பாரதநா டூழிபல சிறந்து வாழி.

ஆறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கலையறிவாற் செயன்முறையாற் கலங்காத மதிவலியாற் கடல்சூழ் ஞாலத்
திலைநிகரின் றெனத்திகழும் ராஜாஜி ஜவஹர் படேல் ராஜன் பாபு
நிலைபிறழா நெறிமுறையாற் காத்தளிக்கும் இந்நாடு நிலவீ தென்றும்
மலைமிசை நாட்டியசோதி மணிவிளக்காய் நீடூழி வாழி மாதோ.

தாழிசைகள்.

பொன்மைவெண்மை பசுமையினாற் பொலிந்துலகத் துயிர்யாவும் புகலவோங்கி
நன்மைதரு பாரதத்துக் குடியரசின் கொடியரசு நாளும் வாழி.

வாழிய பாரத நாட்டு மணிக்கொடி வாழிய நல்லறமே
வாழிய பாரத நாட்டுள் உயிர்த்தொகை வாழிய வான்கலையே.

நேரிசையாசிரியப்பா.

நீல மேனி நெடியமா முகிலும்
ஆலமர் செல்வனும் அம்பொற் றாமரை
மேலுறை கடவுளும் வேறுள தேவரும்
காத்தலின் அழியாக் கவினுடைத் தாகிச்
சிபியும் மனுவும் முதலிய திறலார்

செங்கோல் வேந்தர் செந்நெறிப் புரக்க
வளம்பல நிறைந்து நிலம்புகழ் பெருமை
வாய்ந்த பாரத மணித்திரு நாட்டு
வாழ்வீர்! ஒன்று வழுத்துவன் கேண்மின்
அன்னியர் ஆட்சியின் மன்னுநம் நாடு
தன்னர செய்திடும் நன்னாள் இந்நாள்
எழுமின்! தொழுமின்! ஏத்துமின்! போற்றுமின்!
இல்லமும் சாலையும் எழில்மிகப் புனைமின்!
ஆலயம் புதுக்கி யணிமிகப் புரிமின்!
மனத்தெழும் உவகை புலப்படும் முறையால்
விழாக் கொண்டாடுமின் ! மேலும் இம்முறையே
நீடு செல்ல நினைந்தனி ராகி
அன்பும் அருளும் ஆண்மையும் காத்து
வன்பும் மருளும் வாண்மையும் நீக்கி
இன்பம் மிகுவித் தெல்லா வுயிர்க்கும்
துன்பந் துடைக்குந் தொல்குடி யாட்சியிற்
சாதிப் பிணக்கும் சமயச் சண்டையும்
மொழிகள் காரணமா மூளும் முரணும்
இன்றி யாவரும் இந்திய நாட்டு
வென்றி வேந்தராய் மேதினி முழுதும்
அறக்கதி ராழி திறப்பட வுருட்டிப்
பொருளும் இன்பமும் புவிமிசை யோங்கப்
புகழும் போகமும் பொருளும் எண்ணாது
கடமை யொன்றே கருத்திற் பதித்துத்
தலைவர் கட்டளை தலைமிசைத் தாங்கி
இயன்ற வெல்லாம் நயந்து புரிந்து
நம்குடி யரசின் நயத்தகு முறையினைப்
பிறஅர சனைத்தும் பேணிக் கைக்கொள
நாடு முழுதும் நல்லறம் தழைய
ஊழிபல் லூழி யூழி
வாழிய நீவிர்இம் மகிதலத் தினிதே.

நேரிசைவெண்பா.

மதியூகி ராஜாஜி மாண்பார் ஜவஹர்
அதிதீர ரானபடேல் அன்பின்—பதியாய்
வருபாபு ராஜேந்த்ரன் வாழி! இவர் காக்கும்
திருநாடு வாழி செழித்து.

பத்திராசிரியர்.

உ

*வர்ணனை மரபுகள்

[உயர்திரு. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.]

பண்டைத் தமிழாசிரியர்கள் தங்கள் இலக்கியங்களிலே பல வகையான மரபுகளைக் கையாண்டுள்ளார்கள். கோவைப் பிரபந்தத்தைக் கலித்துறையிலும், உலாவைக் கலிவெண்பாவிலும், அந்தாதியை 30 அல்லது 100 செய்யுட்களிலும் பாடினர். இந்நியமங்களெல்லாம் மரபுகளாக முதிர்ந்துவிட்டன. ஒருபொருள்பற்றி ஒன்றிற்கு மேற்பட்ட மரபுகள் வருதலும் காணலாம். அந்தாதியில் இடையிடையே அகப்பொருட் கருத்துக்கள் வருதல் மரபின் மேல் மரபு. இவ்வாறே இலக்கியம்பற்றிப் பலபல மரபுகள் உண்டென்பதை எளிதில் உணரலாம். இம்மரபுகளை மாற்றியமைக்க இலக்கிய ஆசிரியர்கள் பெரும்பாலும் துணியமாட்டார்கள்.

ஆனால், இதினின்று, ஒரு காலத்தில் ஏதேனும் ஒரு காரணத்தால் உண்டாகிய மரபு, பின் எக்காலத்தும் மாறாமல் ஒருபடித்தாய் இருக்குமென்று கொள்ளுதல் சரியன்று. மாறிக்கொண்டே செல்வதுதான் உலக இயல்பு. இலக்கியமரபும் மாறத்தான்செய்யும். தற்காலத்தில் நமது கண்ணெதிரே மரபுமாற்றம் நிகழ்கிறது. பழைய செய்யுள்வகைகள் மறைந்துவருகின்றன. மறுமலர்ச்சிக்கவிஞர்கள் சிந்துவகைகளை இயற்றித் தமது கவித்வத்தைப் புலப்படுத்திவருகின்றனர். இவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கிய தேசியகவி பாரதியும், சிந்துவகைகளையே பெரும்பாலும் பேணியிருக்கின்றனர். இப்பொழுது காதற்பொருள்களைக் கலித்துறைமுதலியவற்றிற் பாடும் மரபு நின்றுபோய்விட்டது. கண்ணன்பாட்டு முதலியவற்றிற்போன்று சிந்துவகைகளிற் பாடும் மரபு தோன்றிவிட்டது.

இலக்கியங்களில்வரும் வர்ணனைகளில் இங்கே கூறியனபோன்ற மரபுகள் எவையேனும் உளவா? வர்ணனையின் இயல்பைச் சிறிது நோக்குவோம்.

யாதேனும் ஒருபொருளை, அதன் பலதிறப்பட்ட இயல்புகளையும் அறிவு எளிதிற்பற்றுமாறு, அழகும் சுவையும்பட விவரித்துக் கூறுவதுதான் வர்ணனை. வர்ணம் என்றால் நிறம் அல்லவா?

---

* சென்னை வானொலிநிலையத்திலிருந்து தமிழிலக்கியமரபுகள் என்ற வரிசையில், 31–10–49 ல் ஒலிபரப்பப்பட்டது. ஷை நிலையத்தார் அநுமதி பெற்று வெளியிடலாயிற்று.

இதிலிருந்து விவரிக்கப்படும்பொருள் அழகுற்றுச் சோபிக்கும்படி வர்ணனை அமைதல்வேண்டும் என்பது பெறப்படுகிறது. இப்படி வர்ணித்தற்குரிய பொருள் எத்தனைவகைப்படுமென்று நாம் தெரிந்துகொண்டால், மரபுகளைப்பற்றியும் ஒருவாறு தெரிந்து கொண்டவர்களாவோம். மரபுகளும் அப்பொருள்வகையைப் பற்றித்தானே இருத்தல்கூடும்?

வர்ணனைப்பொருள் இயற்கையைக் கடந்ததாகவேனும், இயற்கையில் அடங்கியுள்ளதாகவேனும் இருக்கலாம். இயற்கையைக்கடந்த பொருள்வகையில் சிவன் விஷ்ணு முதலிய தெய்வங்களும், பூத பைசாசங்களும் உட்படும். இயற்கையில் அடங்கிய பொருள்வகையில் சூரியன் சந்திரன் முதலிய தெய்வமாகக்கருதும் இயற்கைப்பொருளும், விலங்குகள் பறவைகள் முதலிய உயிருள்ளனவும், மலை மரம் முதலிய உயிரில்லனவும், காலதேசவர்த்தமானமும், மக்களினமும் அமையும். மக்களினத்தில் உருவம்பற்றியும் மனம்பற்றியும் வர்ணனைகள் நிகழலாம். காலதேசவர்த்தமானமும் வர்ணனைப்பொருள்களேயென்று 'மலை கடல் நாடு வளநகர் பருவம்' எனப் பெருங்காப்பியத்தின் இயல்பைக்கூறும் தண்டியலங்காரமும் உணர்த்தும்.

எப்பொருள்பற்றிநிகழ்ந்தாலும், வர்ணனை அப்பொருளை வியக்தமாய் வரையறைப்படுத்தி உணர்த்துவதற்கும், அதனைச் சித்திரித்து மனத்தில் நிறுத்துவதற்கும் உதவுதல்வேண்டும். இங்ஙனம் செய்தற்குரிய பலவகைச் சூழ்நிலைகளையும் ஆசிரியன் அமைத்தல் இன்றியமையாததாம். காலம், இடம், வடிவு, நிறம், மனநிலை, இங்கிதம், இயக்கம், செய்கை முதலியவற்றால் இச் சூழ்நிலை அமையும்.

இனி, வர்ணனைப்பொருள்களை நோக்குவோம். இவற்றுள் இயற்கையைக் கடந்த பொருள்களாகிய தெய்வம், பூத பைசாசம் முதலியவற்றை வர்ணிப்பதில், மரபு ஒரு முக்கியவிஷயமாக அமைந்துவிடுகிறது. ஒரு தலைவன் ஒரு தலைவியை ஒரு சோலையிலே எதிர்ப்படுகிறான். தலைவி அழகிலே மிகச் சிறந்துவிளங்குபவள். அவள் தெய்வப்பிறப்பினளோ மானுடப்பிறப்பினளோ என்று தலைமகன் ஐயுறுகிறான். பின்னர்த் தெய்வமாயின் இன்னின்ன இயல்புகள் இருத்தல்வேண்டும்; அவை இல்லாமையால் மக்களினத்தாளே

என்று துணிகிறான். இங்கே தெய்வவர்ணனையிலே சில மரபுகளைத் தொல்காப்பியர் தந்துள்ளார். அவை சூடிய பூவில் வண்டு மொய்த்தல், கண் இமைத்தல், அஞ்சுதல் முதலியவை. கால்நிலந் தோய்தல், வியர்த்தல், நிழலாடுதல் முதலியவற்றையும் உரைகாரர் சேர்த்துக்கூறுவர். இது தெய்வப்பிறப்பிற்குரிய பொதுவியல்பு. இவ்வியல்புகள் கோவைப்பிரபந்தங்கள் அனைத்திலும் புகுந்து, அவை மரபுவழிப்பட்டன என்பதை உணர்த்துகின்றன.

இனி, தெய்வகணத்தினரை நோக்குவோம். உதாரணம்: கந்தர்வர்கள். இவர்கள் ஆணும் பெண்ணுமாக இருவர் இருவராய்த் திரிவரென்றும், எப்பொழுதும் வீணையைத் தரித்திருப்பரென்றும், இவர்களுள் ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல் வசமாய்க் கலந்துகூடுவரென்றும் கூறுதல் மரபு. இம் மரபுகளைக் கொண்டே தொல்காப்பியர் 'துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே' என்றனர். சங்ககாலத்துச்செய்யுளிற் காணும் இயற்கைக் காதல்நிகழ்ச்சிகளைக் கந்தர்வமணத்தோடு இயைத்துப் பின் அவர்களுக்குரிய மரபுகளைக்கொண்டு அக் காதற்செய்யுட்களை விளக்கமுற்பட்டு அவற்றைச் செயற்கைமயமாய் நெறிப்படுத்தினர் சில ஆசிரியர்கள். இவ்வாறு முதன்முதற் செய்தவர்களுள் ஒருவர் தொல்காப்பியர்.

இனி, தெய்வங்களைத் தனித்தனி நோக்குவோம். இத்தெய்வங்களை வர்ணிக்கும்பொழுதும், மரபுபற்றிச் சில விவரங்கள் தருதல் வழக்கமாயிற்று. உதாரணமாக, சரஸ்வதிதேவியை அவள் வெள்ளைவஸ்திரம் தரித்து, ஒள்ளிய ஆபரணங்களையணிந்து, கையில் வீணை புஸ்தகம் முதலியவற்றைத் தாங்கி, வெள்ளைத் தாமரையில் அமர்ந்திருப்பதாக வர்ணிப்பது மரபு. இங்ஙனமே ஒவ்வொரு தெய்வத்தைப்பற்றியும் வர்ணனைகள் மரபுதவறாமல் இலக்கியங்களில் வருகின்றன.

தெய்வங்கள்போலவே இயற்கையைக் கடந்த பிற பொருள்களும் மரபுபற்றியே வர்ணிக்கப்படும். அரக்கர்கள் வக்ரதந்தம், செங்கண், செம்பட்டைமயிர் முதலியன உடையராய்க் கொடிய இயல்புகொண்டவராய் வர்ணிக்கப்படுவார்கள். இவ்வாறே சுவர்க்கம் நரகம் முதலிய கற்பனைப் பிரதேசங்களும் மரபுபற்றியே வர்ணிக்கப்படும்.

இயற்கையில் அடங்கிய பொருள்களை ஓரறிவுமுதல் ஆறறிவு வரை உள்ளனவாகக்கொண்டு வர்ணிப்பர். தொல்காப்பியர் இப் பாகுபாட்டினைத் தந்துள்ளார். புல்லும் மரமும் ஓரறிவின. நந்து ஈரறிவுயிர். சிதல் எறும்பு மூவறிவின. நண்டு தும்பி நாலறிவின. விலங்கும் பறவைகளும் ஐயறிவின. மக்கள் ஆறறிவினர். இம் மரபிற் பிழையாமல் வர்ணனைகள் நிகழவேண்டுமென்பது தொல் காப்பியர்கருத்து.

மரபுபற்றி நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டுவது மக்க ளினமாம். நமது தேசத்தில் மக்களை நாற்பெருஞ்சாதிகளாகப் பண்டைக்காலத்தவர் வகுத்தனர். ஒவ்வொரு சாதியாருக்கும் சிற்சில இயல்புகள் சிறப்பாக உரியன என்று கொண்டார்கள். இவ் வியல்புகளிற் பிறழாமல் மக்கள்-வகுப்பினரை வருணித்தலே மரபு. அந்தணர், பூணூல் கரகம் முதலியவை உடையரென்றும், அரசர் செங்கோல், குடை, முரசு, கிரீடம் முதலியவை உடையரென்றும், வைசியர் வாணிகம் செய்பவரென்றும், வேளாளர் உழுதொழில் செய்பவரென்றும் தொல்காப்பியர் மரபு வகுத்துள்ளார். இவர் விதித்துள்ளபடியே மரபுகளைப் பிற்காலத்தவர்களிற் பெரும் பாலோர் வழங்குவர்.

சாதி இங்ஙனமாக, மக்களுள் ஆண்பாலரிற்சிறந்தார் பெருமை யும் அறிவாற்றலும் உடையரென வருணிப்பது மரபு; பெண் பாலரிற் சிறந்தார் அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும் உடையரென வருணித்தல் மரபு. தொல்காப்பியரே இம்மரபினைத் தமது நூலிற் குறித்துள்ளார்.

பெண்பாலர்பற்றிய வர்ணனை தமிழிலக்கியத்தில் மிக அதிக மாகப் பயின்றுவருகிறது. உலாப்பிரபந்தங்களில் இவ் வர்ணனைகள் விரிவாக முதன்முதலில் வந்தனபோலும். சேரமான்பெருமாளது ஆதியுலா உதாரணம். பின்பு காவியங்களிலும், விறலிவிடுதூது முதலிய பிரபந்தவகைகளிலும் வழங்கத் தலைப்பட்டன. இவற் றுள்ளும் உறுப்புவர்ணனை முறையாயன்றிக் கவிஞனது மனோ பாவனை சென்றபடி நிகழ்ந்தது. பிற்பட்ட நூல்கள் ஒரு மரபினை மேற்கொண்டு உறுப்புக்களனைத்தையும் முறையே வருணித் தன. சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தில் விசயமாதேவியின் வர்ணனை இங்கே குறிப்பிடத்தக்கது. இராமாயணத்திற்கூட

இம்முறைபற்றிய வர்ணனையைக் காணலாம், நாடவிட்டபடலத்தில் இராமன் அனுமானுக்குச் சீதையை அடிமுதல் முடிவரை வர்ணித்துக்கூறும் பகுதியே உதாரணமாகும். மிகப் பிற்பட்ட காலத்தில் இவ்வாறு அடிமுதல் முடிவரையும், முடிமுதல் அடிவரையும் வர்ணிக்கும் தனிப் பிரபந்தங்களே தோன்றிவிட்டன. இவற்றை முறையே பாதாதிகேசமெனவும் கேசாதிபாதமெனவும் பெயரிட்டு ஆசிரியர்கள் வழங்கினர். பதின்மூன்றும் நூற்றாண்டில் தோன்றிய வெண்பாப்பாட்டியலில் இரண்டு பிரபந்தங்களும் விளக்கப்பட்டுள்ளன. இம் மரபு தற்காலத்தில் ஒழிந்துவிட்டது. இதை ஒரு பெரிய நன்மையென்றே சொல்லவேண்டும்.

உறுப்புப்பற்றிய வர்ணனை இவ்வாறாக, மனம்பற்றிய வர்ணனையை இனிக் கவனிப்போம்.

மனநிகழ்ச்சிகளை அவற்றிற்குரிய சொற்களாலேயே வர்ணித்தல் முதலாவது கூறத்தக்கது. மதுரைக்காஞ்சியில் அறங்கூறும் அவையத்தைப்பற்றி,

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து

என வருகின்றது. இங்கே மனநிகழ்ச்சிகள் அவற்றிற்குரிய சொற்களாலேயே கூறப்படுதல் காணலாம்.

இரண்டாவது: மனநிகழ்ச்சிகளை அவற்றின் குறியாகச் சரீரத்தில் தோன்றும் மெய்ப்பாடுகளால் வர்ணித்தல். பேகனது மலையைப் பாடினவிடத்து அவன்மனைவியாகிய கண்ணகி வருந்திக் கண்ணீர்விட்டு விம்மி அழுதாள் என்று சொல்லப்படுகின்றது. கண்ணீர்விடுதல் முதலியன மெய்ப்பாடுகளாகும். இம் மெய்ப்பாடுகளாற் கண்ணகியினது துன்பநிலை உணர்த்தப்படுகிறது. மெய்ப்பாடுகள்பற்றிப் பல நாடக மரபுகள் பண்டையுரைகளில் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளன. இலக்கிய ஆசிரியர்கள், மரபுவழிப்பட்ட இம்மெய்ப்பாடுகளின்மூலமாய், மனநிகழ்ச்சிகளை உணர்த்திவந்தனர். ஆனால் இவ்வகைமெய்ப்பாடுகளில் மனநிகழ்ச்சிகள் அனைத்தும் அமைந்துவிடுமென்று நினைத்தல் தவறாகும்.

மூன்றாவது: மனநிகழ்ச்சிக்குக் காரணமானவற்றைக் கூறுதலால் அந்நிகழ்ச்சிகளை வர்ணித்தல். அதிகமான் நெடுமானஞ்சி இறந்தபொழுது, அவன் தமக்குச்செய்துவந்த அன்புச்செயல்களை

நினைந்து நினைந்து ஔவையார் வருந்துகிறார். துன்பமாகிய மன நிகழ்ச்சியை மிகுதிப்படுத்தும் அன்புச்செயல்களின்மூலமாய் அந் நிகழ்ச்சி உணர்த்தப்படுகிறது.

நான்காவது: மனநிகழ்ச்சியின்விளைவாகக் கருதப்படுவன வற்றின்மூலமாய் அந்நிகழ்ச்சியை வர்ணித்தல். ஒல்லையூர்ச் சாத் தன் மாய்ந்தபின் அவன்பொருட்டு இரங்கிப்பாடும் புலவர் ஒரு சில விளைவுகள் நிகழலாமென்று தமது மனத்துன்பத்தால் கருதுகிறார். இவ்விளைவின்மூலமாக மனநிகழ்ச்சியை வர்ணித்து 'முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' என இரங்குகிறார்.

ஐந்தாவது: இயற்கையே மனநிலைக்கு ஒத்துநிகழ்வதுபோலக் கூறி மனநிலையை உணர்த்தல். இது கவித்வஇயல்புகள் சிறந்து வளர்ந்த பிற்பட்டகாலத்தில் நிகழ்ந்ததெனவேகொள்ளுதல்வேண் டும். சிலப்பதிகாரத்தில் துன்பமாலையில் கண்ணகி,

> பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி:
> காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என்கணவன்?

என்று சூரியனை வினவ,

> கள்வனோ! அல்லன்; கருங்கயற்கண் மாதராய்!
> ஒள்ளெரி யுண்ணும்இவ் வூர்என்ற தொருகுரல்

இராமாயணத்தில் வஞ்சகக்கருத்தோடு இராவணன் முனி வேடங்கொண்டு சீதையிருக்கும் பர்ணசாலையில் வந்து இருந்த பொழுது,

> நடுங்கின மலைகளும் மரனும்; நாவிந்து
> அடங்கின பறவையும்; விலங்கும் அஞ்சின;
> படங்குறைத் தொதுங்கின பாம்பும்; பாதகக்
> கடுந்தொழி லரக்கனைக் காணும் கண்ணினே

என்று இயற்கை பரிதபிக்கின்றது. இவை மரபிற்குத்தக்க உதார ணங்களாம்.

இவைபோன்ற வர்ணனை-மரபுகள் தமிழிலக்கியத்திலே பல உள்ளன. சில மரபுகள் ஒழிக்கத்தக்கன. புது மரபுகள் அமைத்துக்கொள்ளற்பாலன. இந்நெறியிலே தமிழிலக்கிய ஆசிரியர்கள் முயலவேண்டுவது அவசியமாகும்.

தெய்வப்புலவரின் நாவுணர்ச்சி

[உயர்திரு. சி. கணேசையரவர்கள், வருத்தலைவிளான், யாழ்ப்பாணம்.]

"தெய்வப்புலவர்க்கு நாவுணரும்" என்பது ஒரு பழமொழி. தெய்வப்புலமை என்பது முற்பிறப்பின்தொடர்பால் வரும் புலமை என்பது ஆன்றோர்கருத்து. ஒருதெய்வத்தினை உபாசித்து அதனாற் பெறும் புலமை என்பாரும் உளர். ஆயினும், முற்பிறப்புக்களின் தொடர்ச்சியால்வரும் புலமை என்றலே சிறப்பாகும். திருவள்ளுவரும்,

> "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
> கெழுமையும் ஏமாப் புடைத்து"

என்று கூறுதல் காண்க. முற்பிறப்புக்களிலே செய்யுட்களை இயற்றிப் பழகி, அப்பழக்கவுணர்ச்சியோடு வந்து பிறந்தார்க்கு அப் பழக்கவுணர்ச்சி இப்பிறப்பிலே பாக்களையியற்றும் அத்தொழிலைத் தானே அளிக்கும்; அவர்கள் புதிதாக இயற்றிப் பழகவேண்டியதில்லை என்னுங் கருத்துக்கொண்டே "தெய்வப்புலவர்க்கு நாவுணரும்" என அறிஞர் வழங்கிவருவாராயினர். முற்பிறப்பின் வாசனையுணர்ச்சியாலே பாடும் புலவரையே 'இயற்கைப்புலவர்' என்றுஞ் சிலர் கூறுவர். தெய்வப்புலவர்க்கு நாவுணரும் என்ற வழக்கு மிகவும் உண்மையாகும். இதனைப் பெரிதும் கம்பரியற்றிய இராமாவதாரச்செய்யுட்களிலே காணலாம். சில செய்யுட்களிலே அவர் நினைவொடுபடாது அவர்நாவே கூறிவிட்டதுபோலத்தோன்றுஞ் சில சொற்களையும் சில சொற்றொடர்களையும் சில உவமப்பொருள்களையும் நோக்கும்போது அவர்புலமைக்கண் மிக வியப்பும் ஆனந்தமும் உண்டாகின்றன. ஆதலின் அவருடைய நாவுணர்ச்சியை அவ்விராமாவதாரச்செய்யுட்கள் சிலவற்றிலேவைத்து விளக்கிக் காட்டலாகும்.

> "ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
> தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
> கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
> சூடுவன் நாளைவாழ் விதெனச் சொல்லினள்"

இச்செய்யுட்கண், 'கோடிய' என்னுஞ் சொல்லையும் கோமுடி என்னுஞ் சொல்லையும் கம்பருடைய நாத் தான் பாடிச்சென்றபோக்கிலேயே பெய்துவிட்டுச் சென்றதாகத் தோன்றுதல் காண்க. இச்சொற்களின் பொருள்களை நோக்கும்போது மிக வியப்பும் ஆனந்தமுமுண்டாகின்றன. 'கோடிய' என்னுஞ் சொல் தாடகை என்னும் பெண் இறக்கும்படி வளைந்தவில் என்னும் பொருளைத் தருதலோடு நீதியிலே வளைந்தவில் என்னும் பொருளுந்தோன்றத் தந்து அதனால் கோமுடிசூடுதற் கேற்றவனல்லன் என்னும் பொருளும் தோன்றநின்று மிகவும் ஆழ்ந்தபொருளுடையதாய் இன்பந்தருதல் காண்க. கோமுடி என்னுஞ் சொல்லும் நீதியிற்கோடியவனுக்கு நீதியோடரசியற்றும் அரசர்க்குரிய முடிசூடல் தகாது என்னும் பொருளைத் தந்துநிற்றல் காண்க. முடி என்னது 'கோமுடி' என்று கூறியது அப்பொருளைத் தருதற்கே என்க. இச்சொற்கள் மிகவும் ஆழ்ந்தபொருளவாதல் பெண்ணென்றுநோக்காது தாடகையைக் கொன்றவன் நீதியற்றவனாதலின் அவன் முடிசூடின், பெண்ணென்றுநோக்காது உன்னையும் துயர்செய்வான் என்பதுபட நின்றமையான் அறிக.

"இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதோ யாருஞ்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கி
னொப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா"

என்னும் இதன்கண் நாட்காலையில் அலர்ந்த செந்தாமரைமலர் மலர்ச்சியும் அழகும் ஒளியும் பொலிவும் சிறந்து விளங்குதலுடையது. அத்தகைய மலரையும் இராமன்முகம் வென்றதெனவே அது சிறிதும் வாட்டமடைந்திலதென்பது பெறப்படும். அங்ஙனம் பெறப்படுமாறு 'அப்பொழுது' என்னுஞ் சொல்லைக் கம்பர் பாடிச் சென்றபோக்கிலேயே சொல்லிவிட்டுச்சென்றது மிகவும் இன்பந் தருதல் காண்க.

"வடித்தாழ் கூந்தற் கேகயன் மாதே மதியாலே
பிடித்தாய் வையம் பெற்றனை பேரா வரமின்னே
முடித்தா யன்றே மந்திர மென்றான் முகில்வாய்மின்
றுடித்தா லென்ன மன்னவன் மார்பிற் றுவள்கின்றாள்"

என்பதன்கண் அடித்தாலென்னுஞ் சொல்லைக் கோசலையின் துடிப்பைக்காட்டற்கு உவமையாகக் கம்பர் பெய்து பாடிச்சென்றமை மிகவும் இன்பம்பயத்தல் காண்க. முகில்வாய் என்ற உவமையானே மன்னவனுடம்பு கரியதென்பதும் தோன்றல் காண்க.

"வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளும்
நாரதமுனிவற் கேற்ப நயம்பட வுரைத்த நாவும்
தாரணி மவுலி பத்துஞ் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை புக்கான்"

என்பதனுள் 'போட்டு' என்னுஞ்சொல் இழத்தல் என்னும் பொருளில் மார்பின்வலி முதலியவற்றிற்கேற்ப அமையுமாறு பெய்து பாடிச்சென்றதாகக் காணப்பட்டு மிகவும் இன்பம்பயத்தல் காண்க.

இனிச் சில சொற்றொடர்களையும் இங்கே காட்டலாம்.

"இவ்வண்ண நிகழ்ந்த வண்ண மினியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்டேன்"

என்பதனுள் "கைவண்ணமங்குக்கண்டேன் கால்வண்ணமிங்குக் கண்டேன்" என்னும் அடியின்கண் சொற்றொடர்கள் முரண்பட வமைந்து இன்பந்தரும்படி தடையின்றிப் பாடிச்சென்றிருத்தல் மிகவியப்புடைத்தாதல் காண்க.

"சரந்தரு சாப மல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர மூலகி னிற்கு நெடும்பழி பூண்டாள் நின்றாள்
புரந்தர னடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போத லுற்றான்"

என்பதன்கண் "சரந்தருசாபமல்லாற் றடுப்பருஞ்சாபம்வல்ல—வரந்தருமுனிவன்" என்னுஞ் சொற்றொடரைச் சுவைபட அமைத்திருத்தல் காண்க. சரம் தரு சாபத்தைத் தடுக்கினும் தடுக்கலாம், இது தடுத்தற்கரியது என்பதை வலியுறுத்தவே சரந்தருசாபமல்லால் என்பது முன்வைத்துக்கூறப்பட்டது. அன்றியும் பின்வைத்த சாபம் என்னுஞ்சொல் சாபமொழி என்பதையும் உணர்த்த அவ்வாறு கூறப்பட்டது.

"செய்யக் கடவ செயற்குரிய சிறுவ ரீண்டை யாரல்ல
ரெய்தக் கடவ பொருளெய்தா திகவா தென்ன வியல்பென்ன
மையற் கொடியாண் மகனீண்டு வந்தான் முடித்து மற்றென்னத்
தையற் கடனின் றெடுத்தவனைத் தயிலக்கடலின் றலையுய்த்தான்"

என்பதனுள் "தையற் கடனின் றெடுத்தவனைத் தயிலக்கடலின் றலையுய்த்தான்" என்னுஞ்சொற்றொடர் மிகச் சுவைபடக் கவியின் போக்கிலேயே அமைந்திருத்தல் காண்க. அழவந்த பெண்கள் அளவில்லாதார் என்பதை உணர்த்தற்குத் தையற்கடல் என்றது மிகச் சுருக்கமும் விளக்கமும் தோன்ற அமைந்து விளங்குகின்றமை காண்க.

"தேட்டந்தான் வாளெயிற்றிற் றின்னவோ தீவினையோர்
கூட்டந்தான் புறத்துளதோ குறித்தபொரு ளறிந்திலமால்
நாட்டந்தா னெரியுமிழ நல்லாண்மேற் பொல்லாதா
ளோட்டந்தா ளரிதினிவ ளுடன்றெழுந்தா ளெனவுரைத்தான்"

என்பதனுள் சீதையின் நற்குணமும் சூர்ப்பநகையின் தீக்குணமும் தோன்றுமாறு நல்லாள் பொல்லாள் என்ற சொற்களை முரணத் தொடுத்துச் சென்றமை மிகவும் இன்பந்தருதல் காண்க.

"வாளரம் பொருத வேலும் மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடு கிடந்த நீலச் சுருளுஞ்செங் கிடையுங் கொண்டு
நீளிருங் களங்க நீக்கி நிரைமணி மாட நெற்றிச்
சாளரந் தோறுந் தோன்றுஞ் சந்திர வுதயங் கண்டார்"

என்பதனுள் சந்திரனுதிக்கும்போது மேன்மாடங்களில் நின்று பார்ப்பவர்க்கு அச்சந்திரனது தோற்றம் மிக அழகாகத் தோன்றும் உலகியல்பையும் அமைத்துச் சாளரம்வழியாக நோக்கிநிற்கும் பெண்கள்முகத்தினது தோற்றத்தைச் சந்திரனாகிய உவமையி லேற்றிச் "சாளரந்தோறுந்தோன்றுஞ்சந்திரவுதயங்கண்டார்" என்னுஞ்சொற்றொடரை மிக இன்பம் பயக்குமாறு சொல்லிச் செல்லுதல் காண்க. இங்கே முற்கூறிய வேல் முதலிய அடைகளாலே சந்திரனென்றது முகம் என்பது தோன்றக்கூறியிருத்தல் மிகவும் வியப்பைத்தருகின்றது. வேல் முதலிய அடைகளும் உவமைகளாய்நின்று கண்முதலிய உவமேயங்களை உணர்த்தவைத்தமையும் மிகச் சுவைதருகின்றது. களங்கநீக்கி என்ற விசேடணமும் சந்திரனென்றது முகமென்பதைக் குறிக்கநின்றது.

"கொல்லாழி நீத்தங்கோர் குனிவயிரச் சிலைதடக்கைக் கொண்ட கொண்டல்
எல்லாழித் தேரிரவி யிளங்கரத்தா லடிவருடி யனந்தல் தீர்ப்ப
அல்லாழிக் கரைகண்டா னுயிரவாய் மணிவிளக்க மழலுஞ் சேக்கைத்
தொல்லாழித் துயிலாதே துயராழி நெடுங்கடலுட் டுயில்கின் றானே"

என்பதனுள், 'துயராழி நெடுங்கடலுட் டுயில்கின்றானே' என்னுந் தொடருக்கியையச் 'சேக்கைத்தொல்லாழித்துயிலாதே' என்னுந் தொடரையும் மிகவும் சுவைபடப் பெய்துசென்றமை காண்க.

இனி உவமப்பொருள்களையும் இங்கே காண்போம்.

"புள்ளிக் குறியிட் டெனவொண்மீன் பூத்த வானம் பொலிகங்குல்
நள்ளிற் செறிந்த விருட்பிழம்பை நக்கி நிமிரு நிலாக்கற்றை
கிள்ளைக் கிளவிக் கென்னுங்கொல் கீழ்பாற் றிசையின் மிசைவைத்த
வெள்ளிக் கும்பத் திளங்கமுகின் பாளை போன்று விரிந்துளதால்"

என்பதன்கண், வெண்ணிறமுடைய சந்திரனுக்கு உவமையாக வெள்ளியாற்செய்த குடத்தையும் அவனுடைய வெண்ணிறக் கிரணங்களுக்கு உவமையாக அக்குடத்தில் விரித்துவைத்த கமுகம்பாளையையும் கிரணங்கள் நான்குபக்கமும் விரிதற்கு அக்குடத்தில் நான்குபக்கமும் அப்பாளை விரிந்திருத்தலையும் உவமையாக்கிவைத்துக்கூறியது மிகவும் சுவைபயத்தல் காண்க. இங்ஙனமே உதயஞாயிற்றின் செங்கிரணம் நான்குபக்கமும் விரிந்ததற்கு நடனஞ்செய்யும் நடராஜமூர்த்தியின் சிவந்த பொன்னிறச் சடை நான்குபக்கமும் விரிதலை யுவமையாக்கி,

"எண்ணரிய மறையினொடு கின்னரர்க ளிசைபாட வுலகமேத்த
விண்ணவரு முனிவர்களும் வேதியரும் கரங்குவிப்ப வேலையென்னும்
மண்ணுமணி முரசதிர வானரங்கி னடம்புரிவா ளிரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தா லெனவிரிந்த கதிர்களெல்லாம்"

என மிகச் சுவைபடக் கூறியிருத்தல் காண்க.

இன்னும் இதற்கு முன்னுள்ள

"ததையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண மயலுழந்து தளரு மேல்வைச்
சிதையுமனத் திடருடைய செங்கமல முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளி னெழுகின்ற புகர்முகயா னையினுரிவைப் போர்வை போர்த்த
உதையகிரி யெனுங்கடவு ணுதல்கிழித்த விழியேபோ லுதயஞ் செய்தான்"

என்பதனுள் மிகப் பெரிதாகத்தோன்றும் வானத்தின் அடிப்புறத்தே கீழ்த்திசையின் முற்பக்கத்தில் வானத்தைநோக்கச் சிறிதாகத்தோன்றும் வட்டவடிவான ஞாயிற்றிற்குச் சிவபிரானுடைய

நெற்றியிலே அதனைக் கிழித்தெழுந்த விழியை உவமை கூறியது நோக்கநோக்க மிகவும் இன்பம் பயத்தல் காண்க. ஞாயிற்றின் செவ்வொளிபரத்தலால் உதயகிரியும் சிவந்துதோன்றலினாலே அதனைச் சிவனாக உருவகித்தும் அவ்வொளியை இருள் சிறிதுமறைத்துக்கொண்டிருத்தலாலே அவ்விருளைச் சிவன்போர்த்த யானைத்தோலினுக்குவமையாக்கியும் இருளை நீக்கி எழுந்த ஞாயிற்றிற்கு இருளை நீக்குமாறு நுதல்கிழித்த்விழியை உவமையாக்கியும் கூறியது மிகவும் வியக்கத்தக்கதாகும். இச்செய்யுளில் கிழித்த என்னுஞ் சொல்வீழ்ச்சி மிகவும் வியப்பைத்தருதல் காண்க.

> "மறப்பிலள் கொழுநனை வரவு பார்க்கின்றாள்
> பிறப்பினோ டிறப்பெனப் பெயருஞ் சிந்தையாற்
> றுறப்பரு முகிலிடைத் தோன்று மின்னெனப்
> புறப்படும் புகுமொரு பூத்த கொம்பனாள்."

என்பதன்கண் ஒருபெண் தன் கணவன்வரவை நோக்கித் தன்வீட்டின்வெளியே வருதலும் பின் உட்புகுதலுமாய்நின்றதற்கு அடிக்கடி மின்னியொடுங்கும் மின்னலை உவமையாகப்புணர்த்துச் சென்றதும் நிலையின்றி மாறிமாறி நினைக்குஞ் சிந்தைக்குப் பிறப்பிறப்பை உவமையாகப்புணர்த்துச்சென்றதும் மிகவும் சுவைபயத்தல் காண்க.

> "ஆறு செல்லச் செல்லத்தே ராழி கண்டா ரயலப்பால்
> வேறு சென்ற நெறிகாணார் விம்மா நின்ற வுவகையராய்
> மாறி யுலகம் வகுத்தநாள் வரம்பு கடந்து மண்முழுதும்
> ஏறி யொடுங்கு மெறிகடல்போ லெயின்மா நகர மெய்தினார்"

என்பதன்கண் பிரளயகாலத்திலே பூமியை எல்லைகடந்து மூடிய கடல் பின் சிருட்டிகாலத்திலே முன் தான் நின்றநிலைக்கண் வந்து ஒடுங்குதலை இராமன் வனஞ்செல்லும்போது தம் நகரைவிட்டுச் சென்ற சனங்கள், பின் இராமன் ஏறிவந்த தேர் சென்றவழியை நோக்கி இராமன் நகர்திரும்பினான் என்றுகருதித் தாங்கள் இருந்த நகரின்கண்ணேயே போய் ஒடுங்கினமைக்கு உவமையாகப் புணர்த்தி, 'மண்முழுதும் ஏறி யொடுங்கும் எறிகடல்போல் எயின்மா நகரம் எய்தினார்' எனக் கூறிச்சென்றமையும் மிக இன்பந்தால் காண்க.

ஸ்ரீ:

திருக்குருகூர்த் திருப்பணிமாலை

[௩௬-ஆம் பக்கத் தொடர்ச்சி]

41 முழுமணிக்கோ புரமருவு மண்டபமு நீடு
முத்திவா சலுந்திருவி ழாவுஞ் செய்து
செழுமணிப்பூ ணினராதி நாத ராடித்
திருநாளு மாவணைப்பா யசமு மெல்லாம்
எழுமணித்தோள் வடமலைபூ பாலன் ஞாலத்
தியற்றுமா ணையின்படிநின் றியற்றல் செய்தான்
கொழுமணித்தார்ப் புயன்வீழி மிழலை வாழும்
குணவூர்ச் செவ்வந்தி பூசுரர் பிரானே.

42 கற்றுடைய தமிழ்க்காரி மாறர்குரு கைக்காவுக் கோயி லுக்குள், முற்றுடைய திருச்சுற்றில் வசந்தனுலா மண்டபத்தை முறையே கண்டான், பெற்றுடைய புகழ்பெத்த பெருமாள்கண் மணிபிறவிப் பெருமா ளுக்கோர், பற்றுடைய தம்பிதிரு மலைக்கொழுந் தென் மகிபதிதென் பழுவை யானே.

43 அங்கா சனமால் கோயில்மகா மண்டபமுன் னிரண்டாம் பொற், சிங்கா சனமண் டபமா றற்குத் திகழும்படி கண்டான், மங்கா வளமைத் தொண்டைநன் னாடு வழுத்திடு மாவையிலோ, துங்காவள மிகுபாரி குமார சுவாமி மகிபதியே.

---

41 குணவூர்ச் செவ்வந்தியென்னும் அந்தணர், கோபுரத்தையடுத்துள்ளமண்டபத்தையும் பரமபதவாசலையும், விழாவையும்செய்து வடமலைப்பிள்ளையன் செய்த பெருமா ளாடித்திருநாளையும், அரவணைப்பொங்கலையும் ஒழுங்குபெற நடத்தினர்.

42 பெத்தபெருமாள்கண்மணியும் பிறவிப்பெருமாள்தம்பியுமான திருமலைக்கொழுந்து என்பார், காரிமாறர்கோயிலின் உட்பிராகாரத்தில் வசந்தமண்டபத்தை இயற்றினர்.

43 பெருமாள்கோயில் மகாமண்டபத்தின்முன் மாறற்குத் (தெற்கு நோக்கி) ஓர் சிங்காதனமண்டபம் கட்டியவர் தொண்டைநாட்டு மாவைக் குமாரசுவாமி என்பவர்.

44 எந்தை திரு மகிழ்மாலைப் பரம னுருக்
கெப்போதுந் திருவுளத்துக் கிசைவ தாக
முந்திவைத்த மாநிதி கல்ம டத்தை
முழுவிலைக்கு வாங்கிவேங்கட மால்ப்ர திட்டை
தந்திரா மானுஜகூ டமுமுண் டாக்கித்
தயங்குநொச்சி குளத்தைவளத் தோடுஞ் சேர்த்தான்
கொந்தவிழ்தார்ப் புயன்மாவைப் பதியில் வாழும்
குமாரசுவா மிப்பெயர்கொள் கொற்ற வேந்தே.

45 தண்டமிழ்தேர் வடமலைமால் தென்பூமி மாலாகித்
தழைக்க வாழ்வு
கொண்டகுரு கூர்முனிகல் மடங்கோயி லாய்ப்பிரதிட்டை
கூரச் செய்தே
கண்டகற்ப க்ரகமத்த மண்டபம்கோ புரம்பூசை
கண்டான் தண்டார்ப்
புண்டரிக மணிமார்பன் சங்கரநா ராயணனேழ்
புவிக்கு வேந்தே.

---

44 மாவைக் குமாரசுவாமி என்பார், முன்னுளில் வைத்தமாநிதிகட்டிய கல்மடத்தை வாங்கி அதில் ஆழ்வார்திருவுளத்துக்கிசைய வேங்கடமாலை நிறுவினர். இராமானுஜகூடமொன்றும் உண்டாக்கி நொச்சிகுளத்தை மானியமாகவிட்டார்.

45 சங்கரநாராயணையன் என்பார், நம்மாழ்வார் ஸ்தலத்திலுள்ள குருகூர்முனியின் கல்மடத்தை வேங்கடமால்கோயிலாயேற்படுத்திக் கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் கோபுரம் முதலியவற்றை அமைப்பித்துப் பூசையும் நடப்பித்தார். இது பெரியன் கூட்டத்தாரின் சொந்தமான தெற்குத் திருவேங்கடமுடையான்சந்நிதி. இச்சங்கரநாராயணையன் ஆதிநாதர் ஆழ்வார்சந்நிதி ஸ்தலத்தார் எழு பிரிவினரில் ஒருவராகிய பெரியன்குடும்பத்தினரின் முன்னோராவர். இன்னும் இம்மரபினரிடமே சுவாமி ஆதிநாதர் ஆழ்வார் சந்நிதித்திறவுகோல்களெல்லாம் வழக்கமாக இருந்து உரியகாலங்களில் உபயோகப்பட்டுவருகின்றன. இக்குடும்பத்தினருக்கு எம்பெருமானார் தாசர் என்ற அருளிப்பாடும் உண்டு.

46 புரிகருணை மிகுமாதி நாச்சியார்தாம் பொலிந்துநின்றா ரோடும்வெளி வீற்றிருப்பத், தெரியவெளிக் குறட்டினொடும் கோயில் யாவும் சீர்பெறவே செய்துபிர திட்டை செய்தான், வரியளிதேன் பருகுபற்ப மாலை மார்மன் மாமறைநூல் பாஞ்சராத் திரநூல் வல்ல, பெரியதிருவடிநம்பி தம்பியாகப்பிறந்தபற்பநாபநம்பிபெருமைவேளே.

47 குருநாளு நீங்காத மதகிரிபட் டுக்கொடிகள் குலாவும்வீதித், திருநாளில் விடாயாற்றிச் சிறப்புமணி மண்டபமும் சிறப்பாய்ச் செய்தான், மருநாளு மலர்ப்பதுமா சனத்தமகிழ் மாறருள் வாத்தா லோங்கு, தருநாளுங் கொடைக்கைநல்லூர்த் தம்பான்சங் கர மூர்த்தி தமிழ்வல் லோனே.

48 சீராட்டும் பசுந்துளபத் தார்மார்பர் மகிழ்மாறர் திருவா ரூட்டு, நீராட்டு மண்டபம்சங் கணித்துறையாற் றிடையருகா னெறியே கண்டான், பாராட்டுந் தமிழ்க்கச்சி யழகிரிபூ பதிதுணைவன் பசுந்தே னூர்பூந், தாராட்டும் புயசயிலன் வேங்கடாத் திரிமுகிலாந் தன்மவானே.

49 விரையூர்தார் மகிழ்வனம்செய் மகிழ்வனத்தின், மகிழ்மாறர் விரும்பு நீண்ட, தரையூர்மண் டபங்கோயில் வரதரா சரைப்பிர திட்டை தழைக்கச் செய்தான், இரையூர்வா ழொருவேந்தன் இரு வப்பன் தருபுதல்வ னிகல் புரக்கும், வரையூர்திண் புயனன பெரியவனுஞ் சின்னவட மலைவில் வேளே.

---

46 பாஞ்சராத்திரம் வல்ல பெரியதிருவடிநம்பியின் தம்பி பற்பநாப நம்பி ஆதிநாச்சியார்கோயிலை வெளிக்குறட்டினொடுங் கட்டிப் பிரதிஷ்டை செய்தார்.

47 நல்லூர்த் தம்பான் சங்கரமூர்த்தி மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி விழாவில் விடாயாற்றிச்சிறப்பும் மணிமண்டபமும் மேலாகச் செய்தார். இவர் ஓர் வேளாளப்பிரபு; வள்ளியோர்; தமிழ்வல்லுநர். இவர்மீது கோவை, பள்ளு, உலா முதலிய பிரபந்தங்களைப் புலவர்கள் இயற்றியிருக்கிறார்கள்.

48 கச்சி அழகாத்திரிநாயக்கர் (1659-1662) சகோதரர் வேங்கடாத்திரி என்பார், சங்கணித்துறையாற்றிடை ஆழ்வார்க்கும் ஆதிநாதர்க்கும் நீராட்டுமண்டபங் கட்டினார்.

49 இரையூர்வாழும் இருவப்பன்மகன் சின்னவடமலை என்பவர், மகிழ்வனத்தில் மாறன்மகிழும் மண்டபமுங் கோயிலுங் கட்டி வரதராஜரை நிறுவினார். இது வடகரையில் உள்ளது.

50 மகிழ்மாற ராதிமால் கருணை கூர
மகிழ்வுடனே யெழுந்தருளும் பிராகாரத்தில்
திகழ்கிட்ணன் கோயிலுக்குப் புறத்தே நல்ல
திருவிழாக் கொட்டகைக்குக் கிழக்கதாகத்
தகவொடுநாற் கால்மணிமண் டபமு மன்ன
தானவறக் கட்டளையுந் தயவாய்ச் செய்தான்
புகழ் குருகைக் குப்பாரை யன்சோற் பாலன்
பூபதிலட் சுமணையன் புகழ்வல் லோனே.

51 மந்திரமுத் தமிழ்க்குருகூ ராதிமால் மகிழ்மாறர் மகிழ்ச்சி யாக, இந்திரன்முன் மறையோர்க ளேவர்க்கும் பரகதியே யியல்வ தாகத், தந்திரமா யோங்குகற்கொட் டகைப்பணிசெய் துயர்ச்சி பெறுந் தகவே பெற்ருன், மந்திருதி ஆற்பாக்கம் வாழ்தீத்தா ரப்ப னெனும் வரிசை மாலே.

52 மறைகிடந்த பொருள்வெளியாத் தமிழாய்ச் செய்த
மாறர்தெப்ப நீர்க்குளத்து வடபால் மேற்காம்
சிறைகிடந்த சாய்வரிக்கல் லெடுத்து நாட்டித்
திருநாளும் படித்தரமுஞ் செழிப்பாய்ச் செய்தான்
பொறைகிடந்த புகழ்வேட ராய னீன்ற
புராந்தைரெகு நாதமால் மெச்சுங் கீர்த்தி
நறைகிடந்த குவளைமலர் மாலை மார்பன்
சங்கரநா ராயண னுயர்வில் வேளே.

---

50 குருகைக் குப்பாரையன்மகன் லட்சுமணையன் என்பார், யானைச் சாலைக் கிருஷ்ணன்கோயிலுக்குப் பின்னே திருவிழாக்கொட்டகைக்குக் கிழக்கேயுள்ள நாற்காற்குறடும் அன்னதான அறக்கட்டளையும் செய்தார். இது பக்ஷிராஜர் பின்மண்டபம்.

51 ஆற்பாக்கத்துத் தீத்தாரப்பன் என்பார், பிற்பத்துப் பத்தியுலா நடைபெறும் கற்கொட்டகையைக் கட்டினர்.

52 சங்காநாராயணன், புராந்தை வேடராயன்மகன்; இரகுநாதராற் புகழப்பெற்றவன். அவன் ஆழ்வார்தெப்பக்குளம் வடமேற்குமூலையிற் சாய்ந்துகிடந்த வரிக்கல்லை எடுத்துக் கட்டித் தெப்பத்திருநாளையும் படித்தரத்தையும் சிறப்பாய்ச்செய்தான். [45-வது செய்யுளில் கூறப்படும் சங்கர நாராயணையனே இவர்.]

53 செங்கணெடு மாலாதி நாதரிரு சரணங்கள் சிறந்து போற்றும், நங்கையரு ணம்மாழ்வார் மஞ்சனமண் டபம்பொன்னு னலமாய்ச் சேர்த்துக், கொங்கணியன் குறட்டுக்கு வடபால்மண் டபம்மகிழ் வாய்க் குளிரச் செய்தான், அங்கணிலம் புகழ்கச்சி வேங்கட்ட ராய னெனு மதுலன் றானே.

54 தெப்பநீர்க் குளம்வரிக்கல் வடபாற் சாய்ந்த
சீரணைத் தாரணங்கீழ் மடையுந் தான்கண்
டெப்பொழுதுங் குளிர்நடைக்கா வணத்தின் மாற
ரிளைப்பாறு மண்டபமும் இனிது கண்டான்
துப்பனைய விசுழமுத மொழியார் மோக
துங்கன் மங்கை நயினுன்சொற் சுமுகன் தூயோர்
செப்புசொன் மாரிநிதி மாரி பெய்யுஞ்
செங்கையன்அண் ணுமலையாந் திடவில் வேளே.

55 இரதமீ திசைந்துலவு நம்மாழ்வா ரெழுந்தருள வியல்பாய் வாய்த்த, திரைகள்மிகு பொருனைபடர் சீபராங்குசநல்லூர்த் திவ் வியமாக, வரதரா சரையும்ரங்க நாயகரை யும்ப்ரதிட்டை மகிழ்ந்தே செய்தான், விரதமா தவம்படைத்த கஸ்தூரி ரங்கப்ப விசயன் றானே.

[தொடரும்.]

---

53 கச்சி வேங்கட்டராயன் என்பார், நம்மாழ்வார் திருமஞ்சனமண்ட பத்துக்குத் தங்கத்தகடடித்துச்சேர்த்துக் கொங்கணியன்குறட்டுக்கு வடக்கேயுள்ள மண்டபத்தைக் கட்டினர்.

54 மங்கைநயினுன் அண்ணுமலை என்பார் ஆழ்வார்தெப்பக்குளத்தின் வடக்குச்சுவர் விழுந்ததை எடுப்பித்துக் கீழ்மடையும் கட்டினர்; நடைக் காவணத்தில் மாறன் இளைப்பாறுமண்டபமுங் கட்டினர்.

55 ஆழ்வாரெழுந்தருளும் பெருமைவாய்ந்த ஸ்ரீ பராங்குசநல்லூரில் கஸ்தூரிரங்கப்பன் என்பவர், வரதாராஜரையும் ரங்கநாதரையும் பிரதிட்டை செய்வித்தார்.

ஸ்ரீ:

பாரதநாட்டுக்

குடியரசுத்திருநாட்கொண்டாட்டம்

பலநூற்றாண்டுகள் அன்னியராட்சியில் அடங்கியிருந்த பாரதநாடு இன்று தன்னரசெய்திக் கிளர்ந்தெழுந்து விளங்குகின்றது. அத்தன்னரசு, பற்பல சிறியசிறிய நாடுகளும் அவ்வந்நாட்டுக்குரிய தனியரசும் ஒருங்கியைந்தாகிய ஒரு பெருங்குடியரசெனின் அது, பாரதநாட்டுமக்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி விளைப்பதன்றோ. நம் நாடு குடியரசுரிமைபெற்ற திருநாள், நிகழும் தைத்திங்கள் கரு-ஆம் நாள் நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாராற் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. சங்கத்தார்விருப்பிற்கு இணங்கி மதுரையிலுள்ள இராமேசுவரதேவஸ்தான பாடசாலைத்தலைவர் உயர்திரு. V. சுப்பிரமணிய ஐயரவர்கள் அக்ராஸநராயமர்ந்தார்கள், கடவுள்வாழ்த்தொடு விழாத்தொடங்கிற்று. முதலில் மதுரை இராமேசுவரதேவஸ்தானக் கல்லூரி வியாகரணப்பேராசிரியர் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியவர்கள் சங்கத்தின்முன்றிலில் நாட்டியிருந்த கொடிக்கம்பத்தில் நம் குடியரசுக்குரிய கொடியினையேற்றுவித்தார்கள். அதன்மேல் செந்தமிழாசிரியரும் தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியருமான T. K. இராமாநுஜையங்கார் தாம் இயற்றிய குடியரசுத்திருநாள்வாழ்த்துப் பாடல்களைப் படித்தனர்*. அதன்பின் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவரும் செந்தமிழ்ச்செல்வருமான திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களும், மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்திசாஸ்திரியவர்களும், மதுரை வழக்கறிஞரும் மதிநலஞ்சான்ற பொதுநலத்தொண்டருமாகிய திரு. R. நரஸிம்மையங்காரவர்களும், அவைத்தலைவரும் நம் நாட்டின் பழம்பெருமையினையும் அது தன்னரசடைதற்காற்றிய பணிகளையும், வரலாற்றினையும், குடியரசெய்திய மக்கள்கடமையினையும் முறையேவிரித்து விளக்கிப்பேசினர். பின் சங்கக்காரியதரிசியவர்களாகிய திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், சபைத்தலைவர் முதலியோர்க்கு நன்றிபாராட்டுரைகூறிச் சந்தன புஷ்பதாம்பூலாதிகள் வழங்கக் கடவுள்வாழ்த்துடன் குடியரசுத்திருநாள் இனிது நிறைவேறியது.

---

*இவ்வாழ்த்துப்பாடல்கள் இப்பகுதியின்முன்னே சேர்க்கப்பட்டுள்ளன.

மதிப்புரை

திருப்பாதுகமாலை:— [இயற்றியவர்: சென்னை உயர்தர நீதிமன்றத்து வழக்கறிஞர் திரு. R. கேசவையங்கார் M.A., B.L., அவர்கள். கிடைக்குமிடம்: பாலாஜீ ஸிண்டிகேட், தெற்கு மூன்றாந்தெரு, புதுக்கோட்டை].

திரு என்பது சிறப்புக்குறித்துவருவதோர் அடைமொழி. பாதுகம்-இறைவனடியிணைகளைத்தாங்கும் மரவடி. இது, பாதுகை யெனவும் அடிநிலையெனவும் வழங்கப்படும். மாலை - அணிவகையுள் ஒன்று. எனவே திருப்பாதுகமாலையென்பது இறைவனடிநிலைகளிற் சூட்டிய மாலை என்று பொருள்படும்.

இறைவனைக்காட்டிலும் அவனடியிணைகள் சிறந்தன. 'நின்னிற் சிறந்த நின்றாளிணையவை' என்பது பரிபாடல். 'வண்புகழ் நாரணன் திண்கழல்' என்பது மாறன் திருவாய்மொழி. இச்சிறப்புப் பற்றியே ஆழ்வார்கள் இறைவனடியிணைகளில் ஈடுபாடுமிக்கவராய்ச் சொன்மாலைகள்சூட்டி மகிழ்வாராயினர் 'மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு' என்பது பெரியாழ்வார் பாசுரம். வேதந்தமிழ் செய்த ஆழ்வார்களில் தலைவராய்விளங்கிய சடகோபரும், உயர்வற வுயர்நலமுடையவன்யவன் அவன்.... துயரறு சுடரடிதொழுதெழென் மனனே' என்று தொடங்கி, 'பரனடிமேல் குருகூர்ச் சடகோபன் சொன்ன நிரனிரையாயிரத் திவைபத்தும்' என்று முற்றுவித்துத் திருவாய்மொழி யாயிரமும் இறைவனடியிணைக்கே சூட்டிய மாலை யென்று விளக்கியருளினர். அவ்விறைவன் அரங்கத்தரவணைப் பள்ளியானே என்பர் ஆன்றோர்.

அவ்விறைவனடியிணைகளைக்காட்டிலும் அவ்வடியிணைகளைத் தாங்கும் மரவடிகள் சிறந்தன என்பதும், பரம்பொருளாகிய இறைநிலையினும் அவ்விறைவனுடைய அவதாரங்களும், அவதாரங்களுள்ளும் இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் சிறந்தன என்பதும் அவற்றுள்ளும் அர்ச்சை சிறந்ததென்பதும் அறிவனூன் முடிபு. 'கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ', 'கேட்பார்கள் கேசவன்கீர்த்தியல்லால மற்றும் கேட்பரோ' என்பது

தமிழ்மறை, 'இலங்கை கட்டழித்த சேவகன்சீர் கேளாதசெவி யென்னசெவியே' 'பஞ்சவர்க்குத் தூதுநடந்தானை யேத்தாத நா என்ன நாவே' என்றார் இளங்கோவடிகளும்.

"நீயும் திருமகளும் நின்றாயாற் குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா—வாசல்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி யினி"

என்றார் பொய்கையாரும்.

இறைவனுடைய அவதாரமூர்த்திகளிற் சிறந்தவரான இராம பிரானடியிணையினும் அவ்வடியிணைகளைத் தாங்கும் பாதுகை சிறந்த தென்பது இராமாயணத்தால் அறியப்படுவது. பாதுகையின் அரசாட்சி இராமபிரானாட்சியினும் சிறந்ததென்று பெரியோர் பணிப்பர்.

"செம்மையின் திருவடித் தலந்தந் தீகென
எம்மையும் தருவன இரண்டும் நல்கினான்",
"நந்தியம் பதியிடை நாதன்பாதுகம்
செந்தனிக்கோல் முறைசெய்ய"

என்பது கம்பர் இராமாவதாரம்.

பாதுகையென்றசொல் வயிணவர்குழுவில் குறிப்பால் அடிமை யென்றபொருளையுணர்த்தியும் நிற்கும். அவ்வடிமைதான் இறை வன்றிறத்துச்செய்யும் அடிமையும் அடியார்திறத்துச்செய்யும் அடி மையும் என இருவகைப்படும். இப்பொருள்கொண்டு திருமால் தொண்டரில் தலைவரான சடகோபரைத் திருமாற்குப் பாதுகை யாகவும், சடகோபரிடம் மிக்கபேரன்புடைய இராமாநுசரைச் சட கோபர்க்குப் பாதுகையாகவும் பெரியோர் கூறுவதுண்டு. இறைவ னடிநிலைக்குச் சடகோபன் என்ற பெயர்வழக்கும் இங்கு நோக்கத் தகும்.

"பூமகள்கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த்
தாம்மகிழும் செல்வச் சடகோபர்—தேமலர்த்தாட்
கேய்ந்தினிய பாதுகமாம் எந்தையிராமாநுசனை
வாய்ந்தெனது நெஞ்சே மகிழ்"

என்னும் மாமுனிவர் பாசுரம் இதனை வலியுறுத்தும்

இவ்விருதிறத்தடிமையினையும் விழைந்த மறைகளின்வரம்பு கண்ட தூப்பில்வள்ளல், அர்ச்சாமூர்த்திகளிற் சிறந்தவராய்த் திருவரங்கத்துள் எழுந்தருளியுள்ள நம்பெருமாளையே இராமபிரானுகக்கொண்டு அப்பெருமானுடைய பெருமையெல்லாம் புலனுகும்படி வடமொழியில் ரகுவீரகத்யம் என்னும் அரிய பெரிய நூலை வெளியிட்டும் அப்பெருமானுடைய திருவடிநிலையாகிய பாதுகையின் பெருமையெல்லாம் இனிது விளங்கத் தம்முடைய ஒப்புயர்வற்ற கவித்வசாமர்த்யத்தால் வடமொழியிலே 'செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற்சீரிய கூரியதீஞ்சொல் வெளவிய' ஆயிரங்கவிமலர்களால் ஒருமாலையினை யியற்றிச்சூட்டியும் மகிழ்ந்தனர். அம்மாலை பாதுகாசகஸ்ரம் என்ற திருநாமத்துடன் உலகுபுகழத்திகழ்கின்றது. அந்நூல், வடமொழியிலுள்ள செய்யுள்வகையத்தனையும் பல அரிய சித்திரகவிவகைகளும் கொண்டு சிறந்தது; பாதுகையின்பெருமையும்பரதாழ்வான் அதனைப்பெற்றவரலாறும் அதற்கு முடிசூட்டியதும் இராமபிரான் மீண்டபின் பாதுகைக்கு நிகழ்ந்த சிறப்புக்களும் அதன் உறுப்புக்களின் வருணனைகளும் தோத்திரமும் ஆகிய பல்வேறுபொருள்களை 32 கலைப்பின்கீழ் முறைப்படுத்தி விரிப்பது. இதன் பெருமையெல்லாம் விரிக்கிற் பெருகும்.

இத்தகைச்சிறப்புவாய்ந்த பாதுகாஸகஸ்ரத்தின் சொல்லினிமை பொருள்நயம் நடையழகு கவியழகு கருத்தமைதி முதலியவற்றில் ஈடுபாடுடைய பெரியோர்பலர் அதைத் தமிழாக்கித்தர முற்பட்டனர். அவருள் அநுமந்தநகர் மதுரகவி ஸ்ரீநிவாஸையங்கார்ஸ்வாமியும் சென்னை வழக்கறிஞர் திரு. R. கேசவையங்கார்ஸ்வாமியும் முன்னெண்ணத்தக்கவராவர். இவருள் மதுரகவி ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி இற்றைக்கு முப்பத்தைந்தாண்டுகளுக்குமுன்பே தம்முடைய சிறப்புப்பெயருக்கியைந்த இனிய செய்யுளுருவில் அதனை மொழிபெயர்த்துதவித் திருநாடலங்கரித்தனர். அது இன்னும் அச்சிடப்படவில்லை. திரு. R. கேசவையங்கார்ஸ்வாமியுதவிய தமிழ்மொழிபெயர்ப்பே தலைப்பிற்குறித்த திருப்பாதுகமாலை யென்பது. இது, முதனூலின் சொல்லும் பொருளும் தொடையும் நடையும் உறுப்புக்களும் ஆதியவற்றைப் பெரும்பாலும் தழுவியமைந்த ஆயிரத்தெட்டுக்கவிமலர்களால் தொடுக்கப்பட்டது.

இதனுள் பலவேறு சந்தங்களுடைய தமிழ்ச்செய்யுள்வகைகள் கௌடநெறிதழுவியமைந்துள்ளன; 20க்கு மேற்பட்ட அருமையான சித்திரகவிகள் விளக்கப் படங்களுடன் திகழ்கின்றன. சித்திரக்கவிகளை இயற்றுதல் அரிய செயலாகும். இத்துறையில் ஆசிரியர் முதனூலில் அமைந்த சித்திரக்கவிகளுள் ஒன்றையும் விடாது அங்குள்ளபடியே அழகும் சுவையும் பொருந்திய தமிழ்ச் செய்யுளாக்கித்தந்திருப்பது பாராட்டத்தக்கது.

இந்நூற்செய்யுட்கள் அவ்வவற்றுக்குரிய முதனூற்சுலோகத் துடனும் அச்சிடப்பட்டிருப்பின் அவ்வவ்விடத்துப் படிப்பவர் இரண்டினையும் ஒப்புநோக்கிக்கோடற்கு உதவியாயிருக்கும்.

இந்நூல்முழுதும் (பெரும்பாலும்) கௌடநெறியால் அமைந் திருத்தலால் வல்லாரேயன்றி மற்றையாரும் இந்நூற்பொருளினை யும் கவிச்சுவையினையும் அறிந்து மகிழும்படி தெளிவான விரிவுரை யொன்று வரைவது இன்றியமையாததாகும். அதனையும் இந்நூலா சிரியரே எழுதியுதவ முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்நூலின் முகப்பில் ஆசிரியரால் ஆங்கிலத்தில் விரிவாக வரை யப்பட்ட பாதுகாதத்வம் என்னும் கட்டுரையினையும் ஆசிரியர் தமி ழாக்கித்தந்து தமிழ்மட்டும் அறிந்தவர்களும் அதனுள்ளுறை பொருளையறிந்து பயனடையச்செய்தல் தகும்.

ஒருமொழியிலமைந்த நூலைப் பிறிதொருமொழியிற் செய்யு ளுருவிலாக்கித்தருதல் எளிதானசெயலன்று. மொழிபெயர்ப் பார்க்கு அவ்விருமொழியினும் நிரம்பிய நூலறிவும் பிற தகுதிகளும் வேண்டும். அம்முறையில் பாதுகாஸஹஸ்ர நூலினைத் தமிழாக்கித் தருபவர்க்கு இன்றியமையாத வடமொழி தென்மொழிகளிற் சிறந்த இலக்கிய இலக்கண நூற்றேர்ச்சியும் சமயநூலுணர்ச்சியும் கேள்வி யறிவும் வாதநூற்பயிர்ச்சியும் செய்யுளியற்றும் ஆற்றலும் பிறகலை யறிவும் இத்திருப்பாதுகமாலையுள் ஆங்காங்குவெளிப்பட்டு ஆசிரியர் திரு. கேசவையங்காரவர்கள் பெருமையை நன்கு விளக்குகின்றன.

இந்நூலாசிரியர் மேலும் பல அரியபெரியநூல்களை நன்கு மொழிபெயர்த்துதவி நீடுவாழ்க.

---

111 கற்பூரஞ் சாத்திக் கதிர்மதியிற் கத்தூரிப்
பொற்பூர் திலகம் புனைந்தருளி—எற்பொலிந்த

112 விண்ணா டிரவிக்கு வீசு கதிர்கொடுக்குங்
கண்ணாடி யூடுதிருக் கண்சாத்தித்—தண்ணார்

113 மணிதிருத்துஞ் செம்பொன் வடவரைபோ லோங்கும்
அணிதிருத்தே ரேறி யருளித்—திணிநிலவு

உலாப்போதல்

114 கொற்றக் குடைநிழற்றக் கோதையர்பல் லாண்டிசைப்பக்
கற்றைக் கவரிசிறு காலசைப்ப—வெற்றிப்

115 பணில முழங்கநிறை பல்லியங்க ளார்ப்பக்
குணிலறையும் பேரிநிரை கொட்பத்—திணியவுல

116 குண்டுமிழ்ந்தான் வந்தா னுபயவிபூ தித்தலமும்
கொண்டுசெங்கோல் செய்தருளுங் கோன்வந்தான்—பண்டைமறைக்

117 கெட்டாத சோதிவந்தா னெங்கள் பிரான்வந்தான்
மட்டார் துழாயலங்கல் மால்வந்தான்—எட்டெழுத்தும்

---

111 கத்தூரி - கஸ்தூரி. எல் - ஒளி.

112 விண் நாடு இரவிக்கு - ஆகாயத்தை விரும்பிய சூரியனுக்கு.

97—113 என்மனத்திறைன் (68), சித்திரைத்திருநாளில் ஒருநாள் (96), இருந்து, அணிந்து (97), சாத்தி, (99), சூட்டி (100), சேர்த்தி, (101), வேய்ந்தருளி (102), அணிந்து (103), வனைந்தருளி (104), அணிந்து (105), வேய்ந்து (106), சேர்த்தி (107), வீக்கி, செறித்து (108), சேர்த்தி (110), சாத்தி, புனைந்தருளி (111), கண்சாத்தி (112), ஏறியருளி (113) என வினைமுடிவுகொள்க.

114 கவரிக்கற்றை - சாமரைத்தொகுதி. சிறுகால் அசைப்ப - இளங் காற்றுவீச.

115 பணிலம்-சங்கம். குணில்-குறுந்தடி. நிரை-வரிசை. கொட்ப- சூழ. திண்ணியவுலகு என்க.

116 உபயவிபூதி - நித்யவிபூதியும் லீலாவிபூதியும்.

117 மட்டு - தேன். அலங்கல் - மாலை.

118 தானாகி நின்றருளுந் தம்பிரான் வந்தானென்
றூனாது சின்னங்க ளார்ப்பெடுப்ப—வானளவு

[புடைவருவோர்]

119 சேடத் திருப்புளிக்கீழ்த் தென்பா லுதித்தமகிழ்த்
தோடுற்ற மாலைச் சுடர்ப்பரிதி—பீடுற்ற

120 வெள்ளி நெடுஞ்சிகர மீதிவிள ஞாயிறுபோற்
புள்ளெகின வாகனத்திற் போற்றிவரத்—தெள்ளுதமிழ்க்

121 கொல்லிக்கும் வஞ்சிக்குங் கோழிக்குங் கூடற்குஞ்
செல்வத் தனிச்செங்கோல் செய்தருளி—நல்லகுடப்

122 பாம்பின்வாய்க் கைந்நீட்டிப் பாகவதர் மேற்பழிச்சொற்
றீம்புகெடச் செய்தகுல சேகரனும்—ஆம்பரிசாற்

123 சென்று தமிழ்மதுரைத் தென்னன்பால் வாதியரை
வென்று கிழியறுத்த வேதியனும்—பொன்றாத

124 தேவர்கா ணப்பரனைச் சிந்தை விளக்கேற்றி
மூவராய்க் கண்ட முனிவரரும்—பூவணையாம்

125 பன்னாகப் பாய்சுருட்டிப் பச்சைமால் பின்னடக்க
முன்னாகச் சென்ற முதலோனும்—ஒன்னாரைத்

---

118 சின்னங்கள் - எக்காளங்கள். ஆர்ப்பு எடுப்ப - ஆரவாரத்தை மிகுவிக்க.

119 சேடத்திருப்புளி-ஆதிசேஷனாகிய திருப்புளி. மகிழ்த்தோடுற்ற மாலை - வகுளமாலை. மகிழ்த்தோடுற்றமாலைச்சுடர்ப்பரிதி - வகுளபூஷண பாஸ்கரராகிய சடகோபர். பீடு - பெருமை.

120 எகினப்புள் எனக் கூட்டுக. எகினப்புள் - அன்னம்.

121 கொல்லி - கொல்லிநகர். கோழி - உறையூர்.

122 தீம்பு - தீங்கு.

123 கிழி - பொன்முடிப்பு. வேதியன் - பெரியாழ்வார். பொன்றாத - அழியாத.

124 முனிவரர் - பொய்கையார் பூதத்தார், பேயார்.

125 பன்னகமென்பது பன்னாகமென்றாயது விகாரம். சென்ற முதலோன் என்றது திருமழிசையாழ்வாரை.

126 தோள்வலியாற் கொன்று தொலைத்தமால் மந்திரத்தை
வாள்வலியாற் கொண்டுகலி மாய்த்தோனும்—கோளரவிற்

127 பொன்னி நடுவே புளினத்துக் கண்டுயின்ற
தென்னரங்கர் நீண்முடியுஞ் சேவடியும்—முன்னுறவே

128 கண்டகண்கள் மற்றொன்று காணாதெனவேமுன்
வண்டமிழிற் சொன்னமுனி வாகனனும்—விண்டடவி

129 வெள்ளி யுதித்து விடிபோதின் மாயோனைப்
பள்ளி யுணர்த்தியசொற் பாவலனும்—வெள்ளநீர்க்

130 கங்கை குடையமகிழ்க் கற்பகத்தைத் தென்றிசைக்கே
வெங்கதிர்போற் கண்டுவரு வித்தகனும்—பொங்குமறை

131 நாலா யிரந்தமிழும் நாவீறன் பாற்கேட்டு
மேலாய நாதமுனி வேதியனும்—நாலாய

132 பண்டை மறையிற் பதிந்திருந்த வுட்பொருளைக்
கொண்டுபா சண்டக் குறும்பறுத்து—விண்டுவே

133 மிக்கோ னெனவுலகில் வீறுபெற நூலுரைத்து
முக்கோல் பிடித்த முனிவரனும்— அக்கலையே

---

126 கலிமாய்த்தோன் என்றது திருமங்கையாழ்வாரை. கோளரவில் - வலிய பாம்பில்.

127 பொன்னி - காவிரி. புளினம் - மணல்திடர்.

128 முனிவாகனன் - திருப்பாணாழ்வார்.

129 பள்ளியுணர்த்திய பாவலன் - தொண்டரடிப்பொடியாழ்வார்.

130 மகிழ்க்கற்பகம் - வகுளமாலையணிந்த கற்பகத்தைப்போல வரையாதுகொடுக்கும் வள்ளலாகிய சடகோபர். வித்தகன் என்றது மதுரகவியாழ்வாரை.

131 நாவீறன் - சடகோபர்.

132 பாசண்டக்குறும்பு - வேதநிந்தனைசெய்யும் புறச்சமயிகளாகிய பகைவரை.

133 நூல் - சீபாடியம் முதலியவை. முனிவரன் - இராமாநுசர்.

134 இங்கா தரிக்க வெழுபத்து நாலுமணிச்
சிங்கா தனத்திருந்த தேசிகரும்—அங்கவர்கள்

135 கூட்டிய தொண்டர் குழாங்கள் புடைநெருங்கி
ஈட்டுதமிழ் வேதத் திசைபாடத்—தோட்டிதழி

136 ஆகத்தா னான்முகனு மாறுமுக னுஞ்சேய
மாகத்தா னும்வச் சிரத்தோனும்—வேககதிர்

137 ஆறிருவ ரோரிருவ ரானோர் பதினொருவர்
கூறுமிரு நால்வர் குழாங்களுடன்—பேறுன

138 உம்பர் முனிவ ருரகேச ருஞ்சூழ்ந்து
செம்பதுமத் தாள்போற்றிச் சேவிப்பப்—பம்புதிரள்

---

134 தேசிகர் – ஆசாரியர்.

135 தொண்டர்குழாங்கள் - அடியார்திருக்கூட்டமும். ஈட்டு - திரட்டித்தொகுக்கப்பட்ட. தமிழ்வேதம் - ஆழ்வார்களுடைய அருளிச் செயல்கள்.

122–135 குலசேகரனும்(122), வேதியனும்(123), முனிவரரும் (124), முதலோனும் (125), கவிமாய்த்தோனும் (126), முனிவாகனனும் (128), பாவலனும் (129), வித்தகனும் (130), நாதமுனிவேதியனும் (131) முனிவரனும் (133), தேசிகரும் (134), தொண்டர்குழாங்களும் (135), தமிழ் வேதத்திசைபாட (135) என முடிக்க.

135—36 தோட்டிதழி ஆகத்தான் - இதழ்களையுடைய கொன்றை மாலையையணிந்த மார்பினையுடைய சிவபிரான். நான்முகன் - பிரமன். ஆறுமுகன் - முருகன். சேய - நெடிதாகிய. மாகம் - விண்ணுலகு. வச்சிரத்தோன் - வச்சிராயுதத்தையுடைய இந்திரன்.

136—37 வேக கதிர் ஆறிருவர் - விரைந்துசெல்லும் பன்னிரண்டு ஆதித்தரும். ஓர் இருவர் - ஒப்பற்ற இருவராகிய தேவமருத்துவரும். பதினொருவர் - பதினோருருத்திரரும். கூறும் - சொல்லப்படுகிற. இருநால்வர் - எண்மராகிய வசுக்களும். (என்றது முப்பத்துமுக்கோடிதேவர் தலைவராகிய முப்பத்துமூவரை). குழாம் - கூட்டம். பேறு - இலாபம்.

138 உம்பர் - தேவர். உரகேசர் - நாகர்தலைவர். செம்பதுமத்தாள் - செந்தாமரைமலர்போலும் திருவடிகளை. போற்றி - துதித்து. சேவிப்ப - வணங்க. பம்பு - ஆரவாரத்தையுடைய. திரள் - கூட்டமான.

139 ஆனை முகவமா ரைஞ்ஞூறு பேர்சூழச்
சேனை முதற்கடவுள் சென்றணுகி—வானோர்

140 திரண்ட குழுவைத் திருக்கைப் பிரம்பால்
இரண்டு புறமும் இயக்கச்—சுருண்டகுழல்

குழாங்கோள்.

141 நாக மடந்தையரும் நானிலத்தின் மாதர்களும்
போக புவியிலுள்ள பூவையரும்—மாகத்

142 தரம்பையரும் கின்னரர்கூட் டத்துமட வாரும்
வரம்பிகந்து தேர்மறுகில் வந்து—பரம்புகிளிக்

143 கூட்டங்கள் போன்றுங் குயிற்குழாம் போன்றுமளி
யீட்டங்கள் போன்றும் எழுந்திரைத்துத்—தோட்டுமலா

144 ஓதி சரிய வுடைநெகிழ மேகலையும்
பாதி சரியமுலைப் பாரத்தைச்—சீதமலர்க்

145 கையா லணைத்துக் கலைதாங்கிக் காமவேள்
கொய்யா மலர்வாளி கோத்திழுக்கப்—பொய்யாம்

---

139 ஆனைமுக அமரர் - ஆனைமுகத்தையுடை தேவர். ஐஞ்ஞூறு - ஐந்நூறு. சேனைமுதற்கடவுள் - சேனைத்தலைவர் = விஷ்வக்ஸேநர். அணுகி - கிட்டி. வானோர் தேவர்.

140 இயக்க - செலுத்த. குழல் - கூந்தல்.

141 நாகமடந்தையர் - நாகலோகத்துப்பெண்கள். நானிலத்தின் மாதர்கள் - முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று பகுக்கப்பட்ட நான்கு நிலத்திலும் வாழும் பெண்கள். பூவையர் - பெண்கள். மாகம் - தேவருலகம்.

142 மடவார் - பெண்கள். வரம்பு இகந்து - எல்லைகடந்து. தேர் மறுகு - ரதவீதி. பரம்பு - பரவிய.

143 கூட்டம் குழாம் ஈட்டம் என்பன ஒருபொருட்கிளவிகள். அளி - வண்டு. இரைத்து - ஆரவாரித்து. தோட்டு - இதழ்களையுடைய.

144 ஓதி - கூந்தல். மேகலை - இடையணி. சீதம் - குளிர்ச்சி.

145 கலை - உடை. காமவேள் - மன்மதன். கொய்யாமலர்வாளி - பறிக்காத மலரம்பு.

146 இடையொடியு மென்றுசிலம் பேங்கவெழுந் தோடி
நடைதளர்ந்து தேர்மருங்கி னண்ணிப்—படியளந்த

147 தாளுந் திருவரையுந் தார்மார்புஞ் சங்காழித்
தோளுங் குழையுஞ் சுடர்முடியும்—மூளும்

148 கருணைத் திருமுகமுங் காராழி யன்ன
தருணத் திருவழகுந் தாங்கண்—டுருகியவர்

149 பேரழகு வெள்ளப் பெருக்காற்றி னின்றுமனம்
போவறி யாதயர்ந்து பேதுறுவர்—ஆரியரே!

150 கண்ணுதல்நஞ் சுண்ணக் கடலமுதந் தேவருண்ணப்
பெண்ணமுத முண்ட பெருமானே!—தண்ணார்

151 அருமா கடலமுதே! ஆதிப் பிரானே!
திருமா மகள்மருவுந் தேனே!—பெருமானே!

152 எண்ணில்பல கோடி யிடைமாதர் வாயமுதம்
உண்ணவுண்ணத் தித்தித் துவந்தீரே—நண்ணுபதி

153 னாறாயிரம் பெண்க ளார மூலைக்களபச்
சேறுடி யாகம் திளைத்தீரே—பேறாக

154 எங்களிரு கொங்கை யிடைக்கே யுமையணைத்துச்
செங்கை வளைநெரியச் சேராமோ—பொங்குந்

---

146 சிலம்பு - நூபுரம்.

147 தாள் - திருவடி. குழை - காதணி=குண்டலம். சுடர்முடி - ஒளிபொருந்திய கிரீடம். மூளும் - பொங்குகின்ற.

148 கார் ஆழி - கருங்கடல். தருணம் - யௌவனம்.

149 பேர - பெயர. அயர்ந்து - சோர்ந்து. பேதுறுவர் - மயங்குவாராகி. ஆரியரே - வணங்கத்தக்கவரே.

150 கண்ணுதல் - நெற்றியிற் கண்ணுடைய சிவபிரான். தண் ஆர் - குளிர்ச்சிபொருந்திய.

153 ஆரமுலை - மாலையணிந்த தனம். ஆகம் திளைத்தீர் - மார்பைக் கூடினீர்.

155 திருப்பவள வாயமுதந் தித்திக்க மாந்தி
யிருப்பவெமைக் கண்பார்த் திரங்கீர்—பொருப்புநிகர்

156 கச்சுப் பொதிமலையிற் காமவே ளம்புபட்ட
பச்சைப் பசும்புண்ணைப் பாரீரோ—நச்சரவின்

157 வழ்மரமு மோரம்பா லெய்தீரே யன்றில்வாழ்
பாழ்மரத்தை யெய்தாற் பழியாமோ—சூழ்கின்ற

158 வோசைக் கடலடைத்தீ ரொண்ணுதலுக் காகவெங்க
ளாசைக் கடலடைத்தா லாகாதோ—நேசித்த

159 கூனிக் கழகு கொடுத்தணைந்தீ ரெம்முடைய
மேனிக் கழகழித்து விட்டீரே—சானகிக்காய்ப்

160 பாரச் சிலையொடித்தீர் பஞ்சபா ணன்கருப்பு
வீரச் சிலையொடித்து மேவீரோ—ஆரத்

161 திருக்குழலோ சைக்குருகுஞ் சிந்தயந்தி யாகா
திருக்கின்றோம் யாமினிக்கென் செய்வோம்—முருக்கிதழ்வாய்

---

155 மாந்தி - உண்டு. பொருப்பு - மலை. நிகர் - ஒத்த.

156 கச்சு - ரவிக்கை. பொதி - மறைத்த. நச்சரவு - விடப்பாம்பு.

157 இதனுள், இராமாவதாரகாலத்துச் சுக்கிரீவன் வேண்ட ஏழு மராமரங்களையும் ஓரம்பால் எய்த வரலாறு பேசப்பட்டது. அன்றில் - ஒரு பறவை விசேடம். இதன் தொனி காதலரைப்பிரிந்தார்க்குத் துன்பஞ்செய்யும். பாழ்மரமென்றது இங்கே பனையை.

158 ஒண்ணுதல் - ஒளிபொருந்திய நெற்றியையுடைய சீதாபிராட்டி.

159 கூனிக்கு அழகுகொடுத்து அணைந்தது கிருஷ்ணவதாரத்தில்.

160 பாரச்சிலை - கனத்தவில்; பெரியவில்லுமாம். பஞ்சபாணன் - மன்மதன். கரும்புச்சிலை வீரச்சிலை யென இயைக்க. கரும்பு கருப்பு என்றனது வலித்தல்விகாரம்.

161 சிந்தயந்தி - கண்ணனிடத்தில் காதல்கொண்ட ஒரு கோபகன்னிகை. யாமினி - இரவு. முருக்கு - செம்முருக்கமரம். இதன் பூவிதழை அதரத்துக்கு உவமைகூறுவது மரபு.

162 ஊதுகுழ லோசை யுயிருண்ணும் உம்முடைய
சீதமுக மாவி சிதையாதோ—ஆதரவாய்த்

163 தேரேறி வந்து செருச்செய் தொருத்தியிரு
வாரேறு கொங்கை மணந்தீரே—போரேறிப்

164 பாயுமெரு தேழடர்த்துப் பாவை யொருத்திகனி
வாயமுத முண்டு மகிழ்ந்தீரே—சேயிழையார்

165 தங்க ளுறவு தவிர்ந்தீரே யாசைகொண்ட
எங்களையுங் கண்பார்த் திரங்கீரோ—துங்கமுலை

166 மானார்க ளின்ப மறந்தீரோ வெம்மைவிட்டுப்
போனாலு மும்மைவிட்டுப் போவோமோ—நானிலத்தி

167 லாரார் மகளிர் ஒருகோடி பெண்களுக்குந்
தீராத வா ... ... தேவரீர்—மார்பிறுகப்

168 புல்லிக் கிடந்து புளக முறுக்கொங்கை
கல்லிக் கிழங்கெடுத்துக் காட்டாமோ—கல்லுக்கு

169 நேரான வும்முடைய நெஞ்சிற் கொடுமையெல்லாம்
ஊரா ரறிய வுணர்த்தோமோ—ஆராத

170 மோகமுடன் வந்தவளை மூக்கரிந்து காதரிந்து
சோகமுட னோடத் துரந்தீரே—வேகமொடு

171 தாயாகி வந்துமுலை தந்தவளை யாவியொடும்
வாயார வுண்டு மகிழ்ந்தீரே—மாயாத

---

162 ஆதரவாய் - விருப்புற்று.

163 ஒருத்தியென்றது உருக்குமிணியை. இருகொங்கை, வார் ஏறு கொங்கை என இயைக்க. கொங்கை - தனம். வார் - கச்சு.

164 எருது ஏழடர்த்து-ஏழு காளைகளை வலியழித்து. பாவை ஒருத்தி-நப்பின்னைப்பிராட்டி.

167 மூலத்திற் சிதைந்த பகுதி புள்ளியிட்டுக் காட்டப்பட்டது.

168 புல்லி - தழுவி. புளகம் - மயிர்க்கூச்சு. கல்லி - இளைத்து.

169–170 ஆராத - தணியாத. மோகமுடன்வந்தவள் - சூர்ப்பநகை. துரந்தீர் - ஓடச்செய்தீர்.

171 முலைதந்தவள் - பூதனை.

172 பண்பழியுந் தாடகையைக் கொன்றபழி போலெமது
பெண்பழியுங் கொள்ளப் பிறந்தீரோ—விண்பிறந்த

173 திங்களுக்கு மன்றிலுக்குந் தென்றலுக்கும் மாரனுக்குங்
கங்குலுக்கு மாவி கரைவேமோ—எங்கட்

174 கிரங்கீ ரிரங்கீ ரெனவுருகி மார
சரங்கோடி கோடியாச் சார—நெருங்குதன

175 பாரத்தை நோக்கிப் பதைத்தார் படைமாரன்
வீரத்தை நோக்கி வெதும்புற்றார்—காரொத்த

176 நீலமணி முத்தும் நிரைராசிப் பைம்பொன்னுங்
கோலமணிச் செப்பிடையே கொட்டினார்—மாலுழந்து

177 கைவா ரணமுங் கலையுஞ் சிறுபுலியூர்ச்
செய்வா ரணமறுகு சேர்வித்தார்—பைய

178 நடந்தபடி கண்டு நடுங்கினார் வேளும்
தொடர்ந்து கணைமாரி தூர்த்தான்—தடந்தேரில்

179 ஆய்ப்பாடி மாத ரழுங்கமது ராபுரியிற்
போய்ப்பா வையர்மகிழப் புக்கதுபோற்—பாப்பணைமால்

---

172 விண் - ஆகாயம்.

173 திங்கள் - சந்திரன். மாரன் - மன்மதன். கங்குல் - இரவு.

174 மாரசரம் - மன்மதபாணம்.

176 கோல மணிச்செப்பு - அழகிய மணிகள் பதித்த செப்புப்போலும் தனம். மால் உழந்து - காமத்தால் வருந்தி.

177 கைவாரணம் - கைவளை. கலை - மேகலை. செய்வாரண மறுகு - அலங்கரிக்கப்பட்ட யானைசெல்லும் வீதி.

178 வேள் - மன்மதன். கணைமாரி - அம்புமழை.

178–79 ஆய்ப்பாடிமாதர் அழுங்கத் தடந்தேரிற்போய் மதுராபுரியிற் பாவையர்மகிழப் புக்கதுபோல் எனக் கூட்டுக. தடம் தேர் - பெரிய தேர். அழுங்க - வருந்த. பாப்பணை - பாம்பணை; வலித்தல்விகாரம். மால் - சிறுபுலியூர்த்திருமால்.

180 வீதி கடந்துமற்றோர் வீதிநடந் தார்வேளுங்
கோதை வரிவிற் குனித்தகன்றான்—பேதை

பேதை.

181 ஒருத்தியிளந் தென்ற லுருவிலா னம்பு
வருத்தியறி யாதமட மஞ்ஞை—அருத்தி

182 விளையாத தேறல் விலைபடா முத்தம்
கிளையா வமுத கிரணம்—முளையா

183 முளைக்கின்ற கொங்கை முகங்காட்டி யாசை
விளைக்கின்ற பேரழகு வெள்ளம்—வளைத்தொசிந்து

---

180 கோதை வரி வில் - மாலைசூட்டிய கட்டமைந்த வில். குனித்து - வளைத்து.

113—180 திருத்தேர் ஏறியருளி, குடைநிழற்ற, கோதையர் பல்லாண்டிசைப்ப, கவரியசைப்ப (114), பணிலம் முழங்க, பல்லியங்கள் ஆர்ப்ப, பேரிகைகொட்ப (115), சின்னங்கள் ஆர்ப்பெடுப்ப (118,) போற்றிவர (120), தமிழ்வேதத்திசைபாட (135), சேவிப்ப (138), சூழ (139), இயக்க (140), மடந்தையரும் மாதர்களும் பூவையரும் (141) அரம்பையரும் மடவாரும் (142) மறுகில்வந்து (142), இரைத்து (143), அணைத்து, தாங்கி (145), ஓடி, தளர்ந்து, நண்ணி (146), கண்டு, உருகி (148), அறியாது, அயர்ந்து பேதுறுவாராகி (149), பெருமானே! (150), அமுதே! ஆதிப்பிரானே! தேனே! பெருமானே! (151), இரங்கீர் (155), பாரீர் (156), இரங்கீர் என உருகி (174), பதைத்தார், வெதுப்புற்றார் (175), கொட்டினார் (176), சேர்வித்தார் (177), நடுங்கினார் (ஆக 178) மால் மற்றோர்வீதி கடந்தார் (180) என வினைமுடிவு கொள்க.

181 இளந்தென்றலும் உருவிலானம்பும் என உம்மை விரிக்க. உருவிலான் - மன்மதன். மஞ்ஞை - மயில். பேதை காதலரும்பாத இளம்பருவத்தினளாதலால் தென்றலாலும் காமபாணங்களாலும் வருந்தாதவள் என்றபடி. பேதையின் சிறப்புத்தொனிக்க, அவளை மஞ்ஞை, தேறல், முத்தம், அமுதகிரணம் (182), அழகுவெள்ளம் (183), மலர்க்கொம்பு, மாலை (184) என உருவகவாய்பாட்டாற் கூறினார்.

181–182 அருத்தி விளையாத தேறல் - (இளைஞருள்ளத்தில்) காதலையுண்டாக்காத தேன். கிளையா - நிறைவடையாத. கிரணம் - கதிர்.

182–183 முளையா முளைக்கின்ற-தோன்றுமல்தோன்றுகின்ற=சிறிதே தோன்றுகிற. முளையாது என்பது ஈறுகெட்டு முளையா என நின்றது. ஒசிந்து - அசைந்து.

184 வாடாத செவ்வி மலர்க்கொம்பு வம்பவிழ்ந்து
சூடாத சாதித் துணர்மாலை—நாடாது

185 தன்பிறந்த தாதை தலையோடு கொண்டவன்போல்
முன்பிறந்து பின்பிறந்த மூரலாள்—முன்புகரி

186 காத்தவனை யேத்தார் கவியின் பயன்போலக்
கோத்து முடியாக் குழலினாள்—வாய்த்தெடுத்த

187 கைத்தாய் குடங்கையுங் காதலித்துப் பெற்றதாய்
கைத்தா மரையுமன்றிக் கண்டுயிலாள்—மெய்த்தனுவைக்

188 கண்ணாடி யூடுகண்டு கைவிளித்து ... ...
... ... மென்றழைத்துப் பேசுவாள்—விண்ணோர்

189 பெருமான் றிருநாமம்......................கு
வருமாறு சொல்லுவித்த வண்ணம்—திருமாது

190 பாவைக்கும் பச்சைப் பசுங்கிளிக்குந் தான்வளர்த்த
பூவைக்கும் வேறிருந்து போதிப்பாள்—ஓவாத

---

184 செவ்வி - பருவம். வம்பு அவிழ்ந்து - நறுமணம் விரிந்து. சூடாத - அணியப்படாத. சாதித்துணர்மாலை - உயர்ந்த பூங்கொத்துக்களால் தொடுக்கப்பட்டமாலை. நாடாது - ஆராயாமல்.

185 தன் தாதை, பிறந்த தாதை எனக் கூட்டுக. தன்னுடைய பிறவிக்குக்காரணமாகிய தந்தை=பிரமன். தாதை தலையோடுகொண்டவன் - பிரமகபாலத்தைக் கைக்கொண்ட சிவபிரான். முன்பிறந்து பின்பு இறந்த - முன்னேதோன்றிப் பின் நெறிகடந்த. மூரல் - பல். கரி - யானை=கஜேந்திரன்.

186 கரிகாத்தவன்-திருமால். கோத்து-இணைத்து. குழல்-கூந்தல்.

187 கைத்தாய் - செவிலி. குடங்கை - உள்ளங்கை. தனு - உடல்.

188 விளித்து அழைத்து.

188—189 மூலத்திற் சிதைவுற்றபகுதி புள்ளியிட்டுக் காட்டப்பட்டுள்ளது. பின்னும் இவ்வாறு காட்டப்பட்டது.

190 பூவை - நாகணம்புள். ஓவாத - கெடாத.

191 கன்னற் புதிய கனுமுத்தங் கார்க்கழனிச்
செந்நேற் பொதிந்த செழுமுத்தும்—பின்னித்

192 திரையெறியுந் தண்பொருனை சேர்முத்துந் தெண்ணீர்
கரையெறியுங் காவேரி முத்தும்—விரவிமணி

193 முற்றிலுந் தூதையுங் கொண்டு முகந்துய்த்துச்
சிற்றி லிழைத்துத் தெருவீதிப்—பொற்றொடியார்

194 பண்ணையில் வண்டல் பயில்காலை யிற்புலியூ
ரண்ண லருமா கடலமுதம்—பண்ணமைந்த

195 தேரிற் பெரிய திருவடிமேற் றோன்றுதலும்
பாரிற் பணிவா ரொடும்பணிந்தாள்—ஆர்வத்தால்

196 அம்மனைமீ ரெம்பிரான் ஆகத் தணிமணியைத்
தம்மினென வாங்கித் தருகவென்றாள்—அம்மனே

197 பத்துருவங் கொண்ட பரந்தாம னூர்படைக்குஞ்
சித்துருவம் வாங்கவெளி தேயென்றார்—முத்தனார்

---

191 கன்னல் - கரும்பு. கார்க்கழனி - பெரிய வயல். பொதிந்த - மறைந்து தங்கிய.

192 திரை - அலை. பொருநை - தாமிரபாணிநதி. தெண்ணீர் - தெளிந்தநீர். விரவி - கலந்து. மணி - அழகிய.

193 முற்றில் - சிறுசுளகு. தூதை - மண் மரம் முதலியவற்றான் இயன்ற சிறுமியர்விளையாட்டுக்குரிய கருவிகளில் ஒன்றான சிறுகலம். முற்றிலும் தூதையும் கொண்டு முகந்துய்த்து - முற்றிலாலும் தூதையாலும் அள்ளிச்சொரிந்து. சிற்றில் இழைத்து - சிறுவீடுகட்டி.

193—94 பொன்தொடியார் பண்ணையில்-பொன்னாற் செய்யப்பட்ட வளையணிந்த மகளிர்கூட்டத்தில். வண்டல்பயில்காலை - விளையாடுங்காலத்து. பண் - ஒப்பனை.

195 பெரியதிருவடி - கருடன். ஆர்வம் - அன்பு.

196 அம்மனைமீர் - தாய்மார்களே! எம்பிரான் ஆகத்தணி மணி - கௌத்துபம். ஆகம் - மார்பு. தம்மின் - தாரும். அம்மனே - தாயே!

197 பத்துருவம் - தசாவதாரம். பரந்தாமன் - திருமால். சித்துருவம் - அறிவுரு. எளிதே - எளியதாகுமா ?. முத்தன் - கட்டற்றவனாகிய திருமால்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணநூல் (5) இனியநாற்பது (உரை) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0

42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0

குறிப்பு:-ஸ்டாக்கில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“செந்தமிழ்”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 45 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணன்,

மானேஜர்.